# RK TUITION CENTRE – KUMBAKONAM

| பத்தாம் வகுப்பு தமிழ் | **தேர்வு – 8** | மதிப்பெண் : 50<br>நேரம் : |
|---|---|---|

பகுதி – 1

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **7 X 1 = 7**

1. மேன்மை தரும் அறம் என்பது ----------
   (அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது
   (ஆ) மறுபிறப்பில் பயன்பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
   (இ) புகழ் கருதி அறம் செய்வது
   (ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது
2. 'வீட்டைத் துடைத்து சாயம் அடித்தல்' இவ்வடிகள் குறிப்பிடுவது----------
   (அ) காலம் மாறுவதை (ஆ) வீட்டைத் துடைப்பதை
   (இ) இடையறாது அறப்பணி செய்தனை (ஈ) வண்ணம் பூசுவதை
3. 'உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும்,
   பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன்' என்றும் பாராட்டப்படுபவர்
   (அ) உதியன், சேரலாதன் (ஆ) அதியன், பெருஞ்சாத்தன்
   (இ) பேகன், கிள்ளிவளவன் (ஈ) நெடுஞ்செழியன், திருமுடிக்காரி
4. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் ------------
   (அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துதவிடாது (ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது
   (இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம் (ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்
5. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ----------
   (அ) வெண்பா (ஆ) அகவற்பா (இ) கலிப்பா (ஈ) வஞ்சிப்பா

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

"மாற்றம் எனது மானிடத் தத்துவம்
மாறும் உலகின் மகத்துவம் அறிவோம்
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்ப தறிந்து ஏகுமென் சாலை"

6. இவ்வடிகளில் இடம்பெற்ற நூல் எது?
   (அ) தேம்பாவணி (ஆ) சாலக்கணிதம் (இ) ஞானம் (ஈ) சிலப்பதிகாரம்
7. பாடலில் பயின்று வருவது -------
   (அ) தீவினை, நல்வினை (ஆ) தீமை, நன்மை (இ) இருவினை (ஈ) அனைத்தும்

www.Padasalai.Net

பகுதி – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும்.** **2 X 2 = 4**
**(10வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)**

8. "கொள்வோர் கொள்க, குரைப்போர் குரைக்க
   உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது" - இவ்வடிகளில் பயின்று வரும் அடியெதுகை, இலக்கணக் குறிப்பெழுதுக.
9. காலக் கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?
10. 'மாற்றம் எனது' எனத் தொடங்கும் காலக்கணிதம் பாடலை எழுதுக.

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும்.** **2 X 2 = 4**

11. குறள்வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டு தருக.
12. வஞ்சிப்பாவிற்கு உரிய ஓசை தூங்கல் ஓசை ஆகும். துள்ளல் ஓசை கலிப்பாவுக்கு உரியது. இத்தொடர்களை ஒரே தொடராக இணைத்து எழுதுக.
13. வெண்பாவின் பொது இலக்கணங்களில் எவையேனும் இரண்டினைக் கூறுக.

பகுதி – 3

**எவையேனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.** **1 X 3 = 3**

14. 'ஞானம்' கவிதை கூறும் கருத்துக்களை எழுதுக.
15. கவிஞனின் இயல்புகளாகக் கண்ணதாசன் கூறியுள்ளன யாவை?

**எவையேனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.** **1 X 3 = 3**

16. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில சான்று தருக.

காந்திபார்க் பின்புறம், கும்பகோணம் R. Karthi M.Sc.B.Ed.
(டவுன் ஹைஸ்கூல் அருகில்)
Cell : 97914 50513 / 93452 17112

17. ‘சுற்றுச்சூழலைப் பேணுவதே இன்றைய அறம்’ என்ற தலைப்பில் பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்பு ஒன்றை உருவாக்குக.

**எவையேனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.** **1 X 3 = 3**

18. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.
19. வாளித்தண்ணீர், சாயக் குவளை, கந்தைத் துணி, கட்டைத் தூரிகை - இச்சொற்களைக் கொண்டு ஒரு பத்தி அமைக்க.

## பகுதி – 4

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க.** **2 X 4 = 8**

20. மொழிபெயர்க்க:

Once upon a time there were two beggars in Rome. The first beggar used to cry in the streets of the city. “He is helped whom God helps”. The second beggar used to cry, “He is helped who the king helps”. This was repeated by them every day. The Emperor of Rome heard it so often that he decided to help the beggar who popularized him in the streets of Rome. He ordered a loaf of bread to be baked and filled with pieces of gold. When the beggar felt the heavy weight of the bread, he sold it to his friend as soon as he met him.

21. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



22. விடுபட்டவற்றைக் குறிப்புகளை கொண்டு எழுதுக.

நாம் எப்போதும் ஒரே மனநிலையில் இருப்பதில்லை. நம்மைச் சுற்றி நிகழும் செயல்களால் நாம் அலைக்கழிக்கப்படுகிறோம். உடன்பயில்பவருடனோ உடன்பிறந்தவருடனோ எதிர்பாராமல் சச்சரவு ஏற்படுகிறது…… அந்தச் சமயத்தில் சினம்கொள்ளத் தக்க சொற்களைப் பேசுகிறோம்; கேட்கிறோம்; கைகலப்பில் ஈடுபடுகிறோம்; இது காறும் கற்ற அறங்கள் நமக்குக் கைகொடுக்க வேண்டாமா மாணவ நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களும் அதனால் ஏற்படும் நன்மைகளும் …

www.Padasalai.Net

| நாம் செய்யவேண்டுவன (அறங்கள்) | அறங்கள் தரும் நன்மைகள் |
|---|---|
| நல்ல சொற்களையே தேர்ந்தெடுத்துப் பேசுதல் | நல்ல நண்பர்களைப் பெறலாம்; எதிரிகளையும் நண்பராக்கலாம். |
| ஒருவரைப் பற்றி இன்னொருவரிடம் மாற்றிப் பேசாதிருத்தல் | |
| பழிவாங்கும் எண்ணத்தைக் கைவிடல் | |

## பகுதி – 5

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **3 X 6 = 18**

23. பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்தையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.
24. குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் நாடகம் எழுதுக.
**மாணவன் - கொக்கைப்போல, கோழியைப் போல- உப்பைப் போல - இருக்க வேண்டும் - கொக்கு காத்திருந்து கிடைக்கும் பாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளும் - குப்பையைக் கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக்கொள்ளும் கோழி – கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணர முடியும் - ஆசிரியர் விளக்கம் - மாணவர் மகிழ்ச்சி.**
25. உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி, மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.

காந்திபார்க் பின்புறம், கும்பகோணம்
(டவுன் ஹைஸ்கூல் அருகில்)
Cell : 97914 50513 / 93452 17112

R. Karthi M.Sc.B.Ed.

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com